Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.173/2025** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW3** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | சீமோன் |
| Father/Husband Name | : | அருள்தாஸ் |
| Village | : | அக்காள் மடம், மீனவர் காலனி, பாம்பன். |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | கடல்தொழில் |
| Religion | : | |
| Age | : | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.10.2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் தாலுகா, பாம்பன், அக்காள்மடம், மீனவர்காலனியில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஜோசப்கென்னடி என் சித்தி கணவர். சாட்சி இளவேனில் சில்பா என் சித்தி மகள். சாட்சி மரியம்பாக்கியம் என் சித்தி. சாட்சிகள் பாஸ்கர், தேவபெனிடிக், எபிராஜ், அகஸ்தஸ் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 09.01.2025ம் தேதி அக்காள் மடம் காலனி வடக்குத் தெருவில் பெனடிக் என்பவரின் அம்மா வனிதாவின் முதல் வருட நினைவு நாளுக்கு நான், பாஸ்கர், பெனடிக், ஆஜர் எதிரி, கென்னடி ஆகியோர் அங்கு சென்றிருந்தோம். நான்

சாப்பிட சென்றுவிட்டு திரும்பி வந்தபோது மாலை 04.00 மணியளவில் பென்னடிக் என்பவர் வீட்டின் வாசல் முன்பு என் சித்தப்பா ஜோசப் கென்னடியும், எதிரி ரபேல் ரமேசும் வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார்கள். எதற்காக வாக்குவாதம் செய்து கொண்டார்கள் என்றால் தெரியாது. வாக்குவாதம் செய்து கொண்டிருந்த இருவரையும் பாஸ்கர், நான் இருவரும் விலக்கி என் சித்தப்பாவை நான் கூப்பிட்டு வந்துவிட்டேன். அன்று இரவு 08.00 மணியளவில் அக்காள்மடம் பஸ்ஸ்டாப்பில் எபிராஜ், அகஸ்தஸ், நான் மற்றும் என் சித்தப்பா கென்னடி ஆகிய நால்வரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த எதிரி என் சித்தப்பாவின் பின்பகுதியில் ஏறிமிதித்தார். என் சித்தப்பா கீழே விழுந்தவுடன் எதிரி பையில் வைத்திருந்த அருவாளை எடுத்து வலதுகை அக்குளுக்கு கீழே வலதுவிலா பகுதியில் வெட்டினார். எதிரி அசிங்கமான வார்த்தைகளால் பேசிக்கொண்டு கீழேவிழுந்த என் சித்தப்பாவின் உயிர்தளத்தில் ஏறி மிதித்தார். பிறகு எதிரி சென்றுவிட்டார். நான் உடனே என் சித்தி வீட்டிற்கு சென்று அங்கிருந்த சித்தி மரியம் பாக்கியம், சித்தி மகள் இளவேனில் சில்பா ஆகியோர்களுக்கு தகவல்களை தெரிவித்து அவர்களை அழைத்து வந்தேன். நானும், என் சித்தியும் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் கொண்டு சென்றோம். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர் என் சித்தப்பா இறந்துவிட்டதாக சொன்னார். நீதிமன்றத்தில் உள்ள அருவாளை வைத்துத்தான் எதிரி என் சித்தப்பாவை வெட்டினார். அந்த அருவாள் **சா.பொ.1**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. | .. | } | |
| Miscellaneous | .. | .. | } | |
| Preliminary Register | .. | .. | } | **S.C.173/2025** |
| Sessions | .. | .. | } | |
| | | | } | Prosecution – **PW2** |
| Deposition of witness for | | | } | Defence – |
| | | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | மரிய பாக்கியம் |
| Father/Husband Name | : | ஜோசப் கென்னடி |
| Village | : | அக்காள் மடம், சேதுபதி நகர், பாம்பன். |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | கூலிவேலை |
| Religion | : | |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.10.2025.

<u>(எதிரி ஆஜர்.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் தாலுகா, பாம்பன், அக்காள்மடம், சேதுபதி நகரில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஜோசப்கென்னடி என் கணவர். சாட்சி இளவேனில் சில்பா என் மகள். சாட்சி சீமோன் என் அக்காள் மகன். சாட்சிகள் பாஸ்கர், தேவபெனிடிக், எபிராஜ், அகஸ்தஸ் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 09.01.2025ம் தேதி என் கணவர் வடக்குத் தெருவில் பெனடிக் என்பவரின் அம்மா வனிதாவின் முதல் வருட நினைவு நாளுக்கு சென்றிருந்தார். அங்கு மதியம் 01.30 மணியளவில் என் கணவருக்கும், எதிரிக்கும் பிரச்சனை ஏற்பட்டதாகவும்,

அங்கிருந்தவர்கள் விலக்கிவிட்டதாகவும் சீமோன், பெனடிக் சொன்னார்கள். அன்று இரவு 08.00 மணியளவில் என் அக்கா மகன் சீமோன் ஓடிவந்து சித்தப்பாவை ரபேல் ரமேஷ் அக்காள்மடம் பஸ்ஸ்டாப்பில் வைத்து மறைத்து வைத்திருந்த அருவாளால் வெட்டிவிட்டதாகவும், உயிர்தளத்தில் ஏறிமிதித்ததால் மோசமான நிலையில் கிடப்பதாகவும் சொன்னான். பதறி அடித்துக்கொண்டு நானும், என் மகளும் அங்கு சென்றோம். என் கணவர் இரத்த வெள்ளத்தில் பேசமுடியாது நிலையில் கிடந்தார். நாங்கள் அங்கு சென்ற உடன் ஆம்புலன்சும் வந்துவிட்டது. நானும், என் அக்காள் மகன் சீமோன் ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். நாங்கள் மருத்துவமனைக்கு செல்லும்போது இரவு 09.00 மணி இருக்கும். பரிசோதித்த மருத்துவர் என் கணவர் இறந்துவிட்டதாக சொன்னார். நாங்கள் அங்கு இருக்கும்போது இரவு 11.00 மணியளவில் போலிசார் அங்கு வந்து எங்களை விசாரித்தார்கள். நடவடிக்கை எடுக்க என் மகள் புகார் கொடுத்தார். மறுநாள் நாங்கள் பிரேதபரிசோதனைக்கு பின்பு உடலை எங்களிடம் ஒப்படைத்தார்கள். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | } | |
| Miscellaneous | .. .. | } | |
| Preliminary Register | .. .. | } | **S.C.173/2025** |
| Sessions | .. .. | } | |
| | | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | | } | Defence – |
| | | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | இளவேனில் சில்பா |
| Father/Husband Name | : | செபஸ்தியான் |
| Village | : | அக்காள் மடம், சேதுபதி நகர், பாம்பன். |
| Taluk | : | இராமேஸ்வரம் |
| Calling | : | இல்லத்தரசி |
| Religion | : | |
| Age | : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.10.2025.

(எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை:–**

நான் இராமேஸ்வரம் தாலுகா, பாம்பன், அக்காள்மடம், சேதுபதி நகரில் வசித்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஜோசப்கென்னடி என் அப்பா. சாட்சி மரியபாக்கியம் என் அம்மா. சாட்சி சீமோன் என் பெரியம்மா மகன். சாட்சிகள் பாஸ்கர், தேவபெனிடிக், எபிராஜ், அகஸ்தஸ் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 05.01.2025ம் தேதி என் கணவர் மீன்பிடிக்க கடலுக்கு சென்றுவிட்டார். நான் எனது இரண்டு குழந்தைகளுடன் என் அப்பா வீட்டில் இருந்தேன். 09.01.2025ம் தேதி மதியம் 01.30 மணியளவில் என் அப்பா அக்காமடம் வடக்குத் தெருவை சேர்ந்த

பெனடிக் என்பவரின் அம்மா வனிதா முதல்வருட நினைவு நாளுக்கு எனது அப்பா சென்றிருந்தார். அங்கு என் அப்பாவிற்கும் எதிரிக்கும் தகராறு நடந்துள்ளது. அங்கே இருந்தவர்கள் சண்டையை விலக்கிவிட்டுள்ளார்கள். அன்று இரவு 08.00 மணியளவில் என் அப்பா அக்காமடம் பஸ்ஸ்டாப்பில் இருந்துள்ளார். அப்போது அங்கு வந்த எதிரி அருவாளால் என் அப்பாவின் வலதுகை அக்குளுக்கு கீழ் வெட்டியுள்ளார். அதைப்பார்த்த என் பெரியம்மா மகன் சீமான் ஓடிவந்து வீட்டில் இருந்த என்னிடமும், என் அம்மாவிடமும் சொன்னார். உடனே நானும், என் அம்மாவும் அங்கு சென்றோம். அங்கு சென்றபோது என் அப்பா வெட்டுப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்தார். என் அப்பாவுக்கு உயிர் இருந்தது, ஆனால் பேச்சுமூச்சு இல்லை. அங்குள்ளவர்கள் 108 ஆம்புலன்சுக்கு போன் செய்துள்ளார்கள். ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு என் அம்மாவும், என் பெரியம்மா மகன் சீமானும் சென்றார்கள். நான் வீட்டிற்கு சென்று சிகிச்சைக்கு பணம் எடுத்துக்கொண்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றபோது என் அப்பா இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் இராமநாதபுரம் மருத்துவமனையில் இருக்கும்போது போலிசார் அங்கு வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1**. எதிரி என் அப்பாவை வெட்டும்போது அந்த சமயத்தில், இடத்தில் என் பெரியம்மா மகன் சீமான், எபிராஜ், அகஸ்தஸ் மற்றும் லியோகெர்லின் ஆகியோர்கள் இருந்துள்ளார்கள். ஆய்வாளர் என்னை மறுநாள் காவல் நிலையத்திற்கு வரச்சொல்லி விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:– இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,
கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.